16.06.2026 வா.சா.1 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை. (ஒ.எஸ்.எண்.28/2020) திருமதி.ரெஜினாமேரி.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் கணபதியம்மாள் என்பவர் அய்யம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 செல்லாது என்று பரிகாரம் கோரி 1ம்பிரதிவாதியால் இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.176/2016 என்று அய்யம்மாளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது தெரியும் என்றால் சரிதான். அ.வ.எண்.176/2016 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் மூலம் வா.சா.ஆ.2 செல்லாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு நானும், சீனியம்மாளும் தாக்கல் செய்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராது பக்கம் 3ல் பாரா 6ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று பிராதை காண்பித்து கேட்ட போது அ.வ.எண்.176/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் கடந்த 17.04.2018 அன்று அய்யம்மாளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச தீர்ப்பு பெற்றுள்ளதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் தீர்ப்பாணை எடுத்து எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். அ.வ.எண்.176/2016 வழக்கில் கண்ட பிரதிவாதி அய்யம்மாளுக்கு நான் என்ன உறவு என்றால் மருமகள். மருமகள் என்பது அவருடைய மகனின் மனைவி என்றால் சரிதான். எனது கணவர் காலம் சென்று விட்டார் என்றால் சரிதான். அய்யம்மாள் கிரையம் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் வாரிசு என்ற முறையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அ)பரிகாரமாக என்ன கேட்டுள்ளேன் என்றால் அ.வ.எண்.176/2016 அய்யமமாள் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு செல்லாது என்று போட்டுள்ளேன். அ.வ.எண்.176/2016 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து எனது மாமியார் அய்யம்மாளோ எனது கணவரோ, நானோ மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமியார் அய்யம்மாள் தாக்கல் செய்துள்ள ஒருதலைப்பட்ச தீர்ப்பை ரத்து செய்ய தாக்கல் செய்த மனு தாக்கல் செய்து அந்த மனுவை மேல்நடத்தாமல் திரும்ப பெற்றுக்கொண்டதாக மேலெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனது மாமியாருக்கும், எனது கணவருக்கும் தான் தெரியும்.

2) அந்த மனுவில் கண்டுள்ள கையெழுத்து எனது மாமியார் அய்யம்மாளின் கையெழுத்தா என்றால் அது எனது மாமியார் கையெழுத்து தான் ஆனால் மனுப்போட்டது எனக்கு தெரியாது. 04.06.2018 தேதியன்று ஐ.ஏ.எண். /2018 இன் அ.வ.எண்.176/2016 மனு அபிடவிட்டில் அய்யம்மாள் என்ற கையெழுத்தை சாட்சி ஒத்துக்கொண்டுள்ளதால் அய்யம்மாள் என்ற கையொப்பம் மட்டும் **பி.வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கின் வா.சா.ஆ.1 னுடைய நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான். வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்தும், பிராது ஆ)பரிகாரத்தில் கண்ட சொத்தும் ஒன்றா அல்லது வேறு வேறா என்றால் ஒரே சொத்து தான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 18 ½ செண்டில் தென்பக்கம் 4 செண்டில் பிரிவின்றி 2 செண்டு கிரையம் பெற்றுள்ளாரா என்றால் 2 செண்டு எத்திராஜ் இடத்திற்கும் வடக்கு வாங்கியுள்ளார் பத்திரத்தில் அவ்வாறுபோடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பிராது ஆ)பரிகாரத்தில் தென்பக்கம் 4 செண்டை நீக்கி அய்யம்மாள் 2 செண்டு கேட்டுள்ளோம். வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர அய்யம்மாளோ, எனது கணவரோ, நானோ கணபதியம்மாளிடம் வேறு சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
16.06.2026.